**கவனிக்க**.- *26.04.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1809 - 2013 මැයි මස 03 වැනි සිකුරාදා - 2013.05.03

*1809 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 604 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 606 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 608 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) *துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *நிதி சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *பிறப்புகள் இறப்புகள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## நாத்தாண்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2013/2014

*(2013 யூலை மாதம் முதல் 2014 யூன் மாதம் வரை)*

*2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத் தவறணைகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனையாகும். 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகள் குத்தகை இடும் நிபந்தனைகளுக்கமையனவாகவும்*

*3. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக நாத்தாண்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொதியிடப்பட்டு கடித உறையில் இட்டு இடப்பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "01 மூதுகடுவ கள்ளுத் தவறணை" அல்லது "02 கட்டுனேரிய கள்ளுத் தவறணை" என குறிப்பிடப்பட்டு 2013.05.23 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் ஒட்டுதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், நாத்தண்டி" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*5. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.*

*6. 2013, மே மாதம் 23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*7. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2013.06.07 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.*

*8. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

**அட்டவணை**

| இல. | வலயம் | ஊர் | குத்தகை விற்பனைத் தொகை |
|---|---|---|---|
| 01 | நாத்தாண்டி | மூதுகடுவ | ரூ. 1,000 0 |
| 02 | நாத்தாண்டி | கட்டுனேரிய | ரூ. 1.000 0 |

என். ஏ. ஏ. பீ. எஸ். நிஸ்ஸங்க,
பிரதேச செயலகம்,
நாத்தாண்டி.

பிரதேச செயலக அலுவலகம்,
நாத்தாண்டி,
2013.04.10.

5-20

---

## கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2013/2014

*(2013 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)*

*2013 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 2007 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கற்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு :

"................. ஆம் இலக்கமுள்ள ................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி"

எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2013.05.20 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 2007 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவனவாக இடுதல் வேண்டும்.

5. 2013.05.20 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2013.06.04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்பிட்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கே. பீ. ரங்கன பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
கற்பிட்டி.

பிரதேச செயலகம்,
கற்பிட்டி.
2013.04.10.

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கற்பிட்டி | தளுவை | கள்ளு | 2013.05.20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு | 1,000 0 |
| 02 | கற்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2013.05.20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு | 1,000 0 |

5-44

---

## புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2013 / 2014

(2013.07.01 - 2014.06.30 ஆந் திகதி வரை)

2013, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2014, யூன் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையின் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத்தொகை, பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:-

"............... இலக்கமுள்ள .................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

என குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2013.05.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2013.05.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஆர். எம். மலிக்,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2013.04.16.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக்குடியிருப்பு | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | 2013.05.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 1,000.00 |

5-45

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சென்ட்ரல் பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 72050
கூட்டிணைப்புத் திகதி : 26.04.2010
பதிவு முகவரி : இல. 171, கனேஹேன, கடுவெல வீதி, பத்தரமுல்ல

சென்ட்ரல் பவர் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 171, கனேஹேன,
கடுவெல வீதி,
பத்தரமுல்ல.

5-13

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

ஐக்கிய அமெரிக்க நாடுகள், பெல்லவிலே எம்ஐ, 48111 பிறை ஆர்கிளிவ்வே ட்ரைவ் 6390 என்ற தற்போதைய முகவரியையும் வித்தாரன்தெனிய, தெமட்டவள என்ற முன்னால் முகவரியில் வசித்த டினிஸ்றர் அபேகுணவர்தன ஆகிய நான், ஐக்கிய அமெரிக்க நாடுகள், கில்ஸ் ஒவ் மிச்சிகன் என்ற முகவரியைச் சேர்ந்த பமெலா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2005, யூலை 23 ஆந் திகதியிடப்பட்டதும் கம்பஹா, நீதிமன்ற வீதி, 72 ஆம் இலக்கத்தையும் 6623000179V என்ற தேசிய அடையாள அட்டையை உடையவருமான பிரசாட் செக்கனத்த ரண்ணுலு என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்திகதியிலிருந்து இல்லாதொழித்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிப்பு வழங்கப்படுகின்றது.

டனிஸ்றர் அபேகுணவர்தன.

5-22

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கொன்டோடெல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 91784
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013, மாச்சு 28
பதிவு முகவரி : இல. 38, கோல்பேஸ் கோர்ட் 2, கொழும்பு 03

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மைடாஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

2013, ஏப்பிறல் 10.

5-57

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகல பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்வதாவது,

வித்திக்குளிய, மொரகஹவெவ ஆகிய முகவரியில் வதியும் கிரிஸ்டோபர் லாசரஸ் ஜோசப் பீரிஸ் ஆகிய என்னால் வித்திக்குளிய, மொரகஹவெவவில் வதியும் ஹேரத் முதியன்சேலாகே லாலனி மல்காந்தி சேனாரத்னவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரான்சிஸ் பொர் பெர்னாந்து பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 1554 மற்றும் 2010.04.11 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதுடன், இதன் பின்னர் கூறப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மீது கூறப்பட்ட எனது அற்றோணி தத்துவக்காரரினால் செய்யப்படும் எந்தவொரு செயற்பாடு அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் வகை கூறமாட்டேன் என்பதனையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

கிரிஸ்டோபர் லாசரஸ் ஜோசப் பீரிஸ்.

5-56

---

## அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின்படி 9(1) ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : டென்சி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட திகதி : பீவீ 61069
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 104/26, கிவ் வீதி, கொழும்பு 2

கம்பனி செயலாளர்.

5-54

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

யுனிவர்சல் ஹோல்டிங்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

மேற்படி கம்பனியினது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334 ஆம் பிரிவிற்கிணங்க கடன் கொடுநர்களுக்கான கூட்டம் ஒன்று 2013, மே மாதம் 28 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

லெவல் 2சீ,
''வெலியென்ட் டவர்ஸ்'',
இல. 46/7 மற்றும் 46/8, நவம் மாவத்தை,
கொழும்பு 02.

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

2013, ஏப்பிறல் 17.

5-27

---

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

கெமனெக்ஸ் எடேசிவ் (பிறைவேட்) லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)
கம்பனியின் பதிவு இல. பீவீ 3701

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் சரத்துக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2013 ஆம் ஆண்டு ஆனி மாதம் 11 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் போர்ட் ரூம் இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை ; மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
கெமனெக்ஸ் எடேசிவ் (பிறைவேட்) லிமிட்டெட்.

2013, சித்திரை 17.

5-23

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : நெக்ஸ்குரூப் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 91655
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013.03.21
பதிவு முகவரி : இல. 154, கமதவத்த வீதி, ராஜகிரிய

எல். எம். மெனேஜ்மென்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 291/32ஏ, ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 05.

5-07

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : தமானியா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 91950
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 05.04.2013
பதிவு அலுவலகம் : இல. 88, வோட் பிளேஸ், கொழும்பு 07

பினான்சியல் அன்ட் பிசினெஸ்
அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

5-77

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஓபன் லிங்க் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 91583
கூட்டிணைப்புத் திகதி : 2013, மார்ச் 18
பதிவு முகவரி : இல. எல்/ஜீ/1, கொஸ்வத்த வீதி, எல்விற்றிகல மாவத்தை, கொழும்பு 08

மனோரி பிரியங்க வீரசேகர,
இயக்குனர்.

5-79

---

### இணைத்தல் பற்றிய அறிவித்தல்

**ஸெம்சன் ஸ்போர்ட்ஸ் வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்**
**(இல. பீவீ 379)**
**டி ஸெம்சன் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
**(இல. பீவீ 380)**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவிற்கமைய ஸெம்சன் ஸ்போர்ட்ஸ் வெயார் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்துடன் டி ஸெம்சன் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் டி ஸெம்சன் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியாகும். இந்த ஒருங்கிணைப்பு 2013, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும். ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியின் விலாசம் : இல. 110, குமாரன் ரத்னம் வீதி, கொழும்பு 02

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டி ஸெம்சன் இன்டஸ்ட்ரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

5-80

---

## ஏல விற்பனைகள்

### கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ – கலேவெல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வத்தேகம யட்டவர கிராமத்தில் அமைந்துள்ள மெல்வர்ன் எஸ்டேட் எனும் காணியில் பிரித்தெடுக்கப்பட்ட இரு காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.**

1. **மேற்கூறிய காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. எஸ். சமரசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 06.01.1987 ஆந் திகதிய 2974 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 02 எனும் காணித்துண்டு. இது 1 ஏக்கர் 33 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

2. **மேற்கூறிய காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். விஜேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட**

***19.03.1989 ஆந் திகதிய 558 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 மற்றும் 02 எனும் தொடர் காணித்துண்டுகள். இது 2 றூட் 12 பேர்ச்சஸ் பரப்பளவானது.***

**ஏலவிற்பனை**

*(இவ்வாதனம் இல. 242, கண்டி பாதை, வத்தேகமயில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும் தும்பர என்டபிரைசெஸ் (லிமிட்டெட்) கடப்பாடுடையதாகவும் நாந்துகல சிரிவர்தனலாகே கனிஷ்க சிரிவர்தன என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

***ஆதனத்தை வந்தடைதல்.***- *வத்தேகம நகரத்திலிருந்து மாத்தளை நோக்கி சுமார் 3 கி. மீ. தூரம் பயணம் செய்து இடதுபக்கமாகத் திரும்பி அப்பாதையில் பத்தன் பஹ புகையிரதப் பாதை வரை வரவும். பின்னர் இந்தப் புகையிரத பாதைக்குச் சமாந்தரமாகவுள்ள பாதைக்குப் பிரவேசித்து கண்டியை நோக்கி சுமார் 50 மீற்றர் தூரம் சென்றதும் இப்பாதையின் இறுதியில் பாதையில் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் 23.05.2013 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

*2 ஆம் விற்பனை*

***பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வத்தேகம பட்டினசபை எல்லைக்குட்பட்ட வத்தேகம கிராமத்தில் அமைந்துள்ள சியம்பலாகஸ்தென்ன வத்த மற்றும் வெலிபேலிய என தற்போது அழைக்கப்படும் காணி உரிமம்பெற்ற நிலஅளவை யாளர் எச். டி. பீ. குணவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 14.01.2006 மற்றும் 18 ஆந் திகதிய 1391 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 மற்றும் 3 எனும் இரு தொடர் காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் வத்தேகம, கண்டி பாதையில் வரிப்பண இல. 238 மற்றும் 240 எனும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 20.48 பேர்ச்சஸ் பரப்பளவானது.***

*(இவ்வாதனம் இல. 242, கண்டி பாதை, வத்தேகமயில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும் தும்பர என்டபிரைசெஸ் (லிமிட்டெட்) கடப்பாடுடையதாகவும் மத்தும வேரலாகே குசுமாவதி என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

***ஆதனத்தை வந்தடைதல்.***- *வத்தேகம நகர மத்தியிலிருந்து கண்டிப் பாதையில் சுமார் 750 மீற்றர் தூரம் சென்றதும் புகையிரத குறுக்குப் பாதைக்கு அண்மையில் பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் 23.05.2013 ஆந் திகதி மு. ப. 10.45 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *09.12.2011 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 30.11.2011 ஆந் திகதிய "த ஐலன்ட்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் விதம்.***- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :*

*கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து), பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும், ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை), நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ அலுவலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.*

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.***- *"முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. : 49/57, மாத்தளை பாதை, கலேவெல" உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 066-2287237, 066-2287238, 066-2289351.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக*
*வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற*
*ஏலவிற்பனையாளர்.*

*இல. : 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மட,*
*கண்டி.*
*தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706.*
*தொலைநகல் இல. : 081-2210595.*

*5-69*

---

***சம்பத் வங்கி பீஎல்சீ***

*(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

***சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை***

*கணக்கு இல. 1004 5316 6016 - ஏ. கே. எம். முனசிங்ஹ மற்றும் டபிள்யூ. ஏ. பீ. ஐராங்கனி*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2008.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.03 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.07 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தாறு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எழுநூற்றைம்பத்தாறு*

ரூபா பத்து சதம் (ரூ. 86,32,756.10) 2008, சனவரி 29 ஆந் திகதி முதல் இல. 3052 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும்வரை எண்பது இலட்சத்து நாற்பதாயிரத்து முந்நூற்றுத்தொண்ணூற்றிரண்டு ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 80,40,392.51) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ.கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2013.05.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி லிமிட்டெட் இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே தெற்கின், அம்பத்தலென் பாஹாலவின் கொட்டிக்காஹாவத்தை-முல்லேரியாவை பிரதேச சபை எல்லைகளுக்குள் கொட்டிகாஹா வத்தையில் அமைந்த "முறுகஹாகும்புர மற்றும் ஓவிட்ட, முறுத்கஹா ஓவிட்டவத்த, வாட்டாலிகேவத்த மற்றும் சுதுவேகும்புர" என்றழைக்கப் படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சாலிய விக்கிரம சிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, பெப்புருவரி 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 6410ஏ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் ஏ இன் எஞ்சிய பகுதி ; கிழக்கிற்கு : வீதி மற்றும் இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் ஏ இன் எஞ்சிய பகுதி ; தெற்கிற்கு : இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் ஏ இன் எஞ்சிய பகுதி ; மற்றும் மேற்கிற்கு : இல. 1797 எனும் வரைபடத்தில் லொட் ஏ இன் எஞ்சிய பகுதி. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட இல. 6410ஏ எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 893/187 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-71

---

### மக்கள் வங்கி – காலி கோட்டை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013.05.21 ஆந் திகதி பி. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- (1) தென் மாகாணத்தில், காலி மாவட்டத்திலே, தல்பெபத்துவ மீபெ உறப்பாவலயில் அமைந்துள்ள துகொடவத்த என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான திரு. கே. சிரிவர்தன அவர்களினால் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட 1999.05.19 ஆந் திகதிக்குரிய 185-1999 ஆம் இலக்க வரைபடத்தின்படி பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 1 என்ற பத்து தசம் ஒன்று ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.11பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அங்குள்ள கட்டிடங்கள், மரங்கள், பழவர்க்கங்கள், பயிர்ச்செய்கை உட்பட அனைத்துமாகும். மேற்கூறப்பட்ட துவகொடவத்த இலக்கம் 15 என்ற இரண்டு றூட் பதினான்கு தசம் இரண்டு நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 14.24பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதற்கான அனைத்தும் பாவிக்கக்கூடிய பாதைக்கான உரிமையையும் கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2010.05.02 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2012.02.02 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- காலி-அக்குரெஸ்ஸ பிரதான வீதியில் பிலான சந்தியிலிருந்து வலப்பக்கமாகத் திரும்பி உறப்பாவன வீதியில் 200 மீற்றர் செல்ல ரன்முது உயன வீதியைக் காணலாம். ரன்முத்து பாதையில் 75 மீற்றர் அளவு தூரம் செல்ல பாதையின் வலப்பக்கமாக இக்காணி அமைந்துள்ளது. ரன்முதுஉயன என்ற வீடமைப்புத் திட்டத்தின் இலக்கம் 1 என்ற காணியாகும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும், வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் காலி, பஹல டிக்சன் வீதி, இலக்கம் 22 என்ற நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இலக்கம் : 091-2232230.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731, 071-4438516.

5-65

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 மற்றும் 19 ஆம் இலக்கங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

*கணக்கு இல. 1076 5314 7396 மற்றும் 0076 1000 0066 – ஜூட் நிமல் சில்வா தோமஸ்புள்ளே மற்றும் தொல்க்கசே கிறிஸ்ட்டீன் நிஷாமனி சொய்சா கடொஸ் மற்றும் என். எஸ். சீ. டிரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்*

*2011 ஆம் ஆண்டின் 1 மற்றும் 19 ஆம் இலக்கங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2012.08.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2012.11.02 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2012.10.19 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்து எண்ணாயிரத்து தொளாயிரத்தெழுபத்துமூன்று ரூபா தொண்ணூற்றெட்டு சதம் (ரூ. 1,25,08,973.98) 2010, மாச்சு 25 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை அறுபத்தைந்து இலட்சத்து எண்பத்துநான்காயிரம் ரூபா (ரூ. 65,84,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதமும் (14%) மேலும் பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்திரண்டு வீதமும் (22%) வட்டி விகிதத்திற்கு அமைவான வருமதியாகவுள்ள வட்டி மற்றும் தொடர் வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 21.05.2013 ஆந் திகதி மு. ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது."*

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளேயின், ராகம் பத்துவின் கம்பஹா பதிவாளர் வட்டாரத்தின் ஜாஎல பிரதேச சபை எல்லைக்குள் கந்தானை உப அலுவலக பிரதேசத்திற்குள் கந்தானையில் அமைந்த கொழும்பு வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 65/5 ஐ ஏற்ற "மில்லகாஹாவத்த மற்றும் மில்லகாஹாஹேனவத்த" என்றழைக்கப் படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ஜே. வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, ஓகத்து 23 ஆந் திகதியிடப் பட்ட இல. 15095 A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கிற்கு : ஸ்வதேஷீ இன்டஸ்ட்ரியல் வார்க்ஸ் இன் வளவு மற்றும் டக்லஸ் தாபரேராவின் லொட் 3A ; கிழக்கிற்கு : ஸ்வதேஷீ இன்டஸ்ட்ரியல் வார்க்ஸ் இன் வளவு மற்றும் முன்னர் செரியட் பெரேராவிற்கு சொந்தமான தற்போது காமினி பெரேராவின் காணி ; தெற்கிற்கு : 8 அடிகள் அகல வீதி மற்றும் மேற்கிற்கு : ரஞ்சித் ரொட்றிகோவின் லொட் 2A1, டக்லஸ் தாபரேராவின் லொட் 3A மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 220A எனும் வரைபடத்தில் 10 அடிகள் அகல வீதி (லொட் 05) ஆகிய எல்லை களுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் முப்பத்தைந்து தசம் ஒன்று ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 35.15பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிர வேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 15095A எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B556/261 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டதன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடனானது:-

கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 578/196 இல் பதிவு செய்யப்பட்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1990, மே 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 220A எனும் வரைபடத்தில் லொட் 5 (10 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்),

கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 579/172 இல் பதிவு செய்யப்பட்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, யூலை 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 3255 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட வீதி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-70

---

**செலான் வங்கி பீஎல்சீ – அபிவிருத்தி வங்கிக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*('கடன்பட்டோர்' என்ற வகையில் கொழும்பு 5 ஐச் சேர்ந்த கமிலா லுசாந்தி யோர்கேசன் என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

**சொத்து ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்கோரள ராகம்பத்து வில் ஜா-எல பிரதேச சபையில் கந்தானை உப அலுவலத்தின் வரிமதிப்பீட்டு இலக்கம் 1103 (பகுதி) டீ மசனோட் வித்தியாலய வீதி, பத்தேகமுவ தெற்கில் அமைந்துள்ள "பத்தன்ஹீகஹாவத்த" மற்றும் "மிலகஹாவத்த" என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. என். டீ. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 21.03.2013 ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல. 2069 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாள**

***மிடப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு பீ ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட நிலவரைபட இல. 2069 இல் துண்டு பீ கொண்டுள்ளது.***

***கூறப்பட்ட காணியின் வழிமுறை உரிமை அதன் மீதாகவும் அத்துடன் அதனூடாகவும் உள்ள விபரம் கீழ்வருமாறு :-***

***மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்கோரள ராகம்பத்துவில் ஜா-எல பிரதேச சபையில் தெற்கு கந்தானை உப அலுவலத்தின் பத்தேகமுவவில் அமைந்துள்ள "பத்தன்ஹீகஹாவத்த மற்றும் மிலகஹாவத்த" என்றழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. என். டீ. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 05.08.1976 ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல. 3772 இன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு குறிப்பிடப் பட்டுள்ள காணித்துண்டு 7 (வீதிக்காக 10 அடி அகலமான பாதை ஒதுக்கப்பட்டுள்ளது) இரண்டு றூட் ஏழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 7.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட நிலவரைபட இல. 3772 இல் துண்டு 7 கொண்டுள்ளது.***

*மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை 2013, மே 28 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

***காணியைச் சென்றடைகின்ற விதம்.*** *- மத்திய கந்தானை நகரத்திலிருந்து கணேமுல்ல வீதி வழியாக மசனேட் கல்லூரி வரை சுமார் 1 கி. மீ. தூரம் சென்று இடதுபக்கமாக உள்ள மசனேட் கல்லூரி வீதியால் திரும்பி சுமார் 300 மீற்றர் தூரம் சென்று பின் வலதுபக்கமாக உள்ள மசனேட் கல்லூரி ஒழுங்கையால் (வீதிக்காக 10 அடி அகலமான பாதை ஒதுக்கப்பட்டுள்ளது) 75 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட காணி இடதுகைப் பக்கமாக அமைந்திருக்கும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** *- 24.01.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 17.12.2012 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" மற்றும் 07.01.2013 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் விதம்.*** *- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்), (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.*

*மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடிசெய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.*

*காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456475, 2456473.*

*துசித கருணாரத்ன (ச. நீ.),*
*அனுமதிபெற்ற ஏலதாரர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*ரி. அன்ட் எச். ஒக்சன்,*
*இல. : 50/3, விஹார மாவத்தை,*
*கொலொன்னாவை.*
*தொலைபேசி : 011-3068185, 2572940.*

*5-61*

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ — மினுவங்கொடை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க கட்டிடங்களைக் கொண்ட வியாபாரச் சொத்து ஏல விற்பனை**

**மினுவங்கொடை பிரதேச சபை, மாபோதல உப அலுவலக எல்லைக்குட்பட்ட எஸ்செல்ல கிராமத்தில் அமைந்துள்ள தும்மல தெனிய கெலே எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் என். விக்கிரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 20.09.2010 ஆந் திகதிய 209/2010 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் இருமாடிக் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 5 ஏக்கர்)**

**ஏலவிற்பனை**

*(இவ்வாதனம் கென்ட் போல்ட்ரி பாம் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் வாசல தன்திரிகே தொன் பிரேம் வசந்த ஜயசிங்ஹ மற்றும் அதிகாரிகே பிரியானி மங்கலிகா ஆகியோர் ஈட்டாளர்களாகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.** - மினுவங்கொடை நகரத்திலிருந்து வேயங்கொடை பாதையில் சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் நய்வல சந்திவரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி திவுலப்பிட்டிய பாதைக்குள் பிரவேசித்து சுமார் 1.5 கிலோ மீற்றர் தூரம் சென்று எஸ்செல்ல பாதைக்குத் திரும்பவும். இப்பாதையில் சுமார் 1.1 கி. மீ. தூரம் (இராணுவ முகாமைக் கடந்து) சென்று இடதுபக்கமாகச் சந்திக்கும் கொங்கிரீட் பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் வலதுபக்கமாக அமைந் துள்ளது.

இவ்வாதனம் 27.05.2013 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு***.- *28.03.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 02.04.2013 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :

கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து), பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும், ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை), நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு***.- "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. : 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. : 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706.
தொலைநகல் இல. : 081-2210595.

5-67

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – மினுவங்கொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***மிகவும் பெறுமதிமிக்க பயிரிடப்பட்ட சொத்து ஏல விற்பனை***

***பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட படபெத்த கிராமத்தில் அமைந்துள்ள படபெத்தவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் நலின் விக்கிரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 20.11.2011 ஆந் திகதிய 455/211 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட மூன்று தொடர் காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் தென்னை மற்றும் தேக்குப் பயிர்ச்செய்கையும் மற்றும் சகலதுமாகும்.***

***(பரப்பளவு : 13ஏ. 2றூ. 24.20 பேர்ச்சஸ்)***

**ஏலவிற்பனை**

*(இவ்வாதனம் கென்ட் போல்ட்ரி பாம் (பிறைவேட்) கடப்பாடுடைய தாகவும் வாசல தன்திரிகே தொன் பிரேம் வசங்த ஜயசிங்ஹ என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்**.- பன்னல நகரத்திலிருந்து மெல்லவ கெதர பாதையூடாக சுமார் 650 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாக வுள்ள மணல்/கொங்கிரீட் இடப்பட்ட பாதைக்குத் திரும்பி அப்பாதையில் ஆலமரத்தைக் கடந்து சுமார் 50 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கமாகத் திரும்பி அப்பாதையில் சுமார் 1.20 கி. மீ. தூரம் T சந்திவரை வரவும். இங்கிருந்து வலதுபக்கமாகத் திரும்பி மணற்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றதும் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 27.05.2013 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு***.- *28.03.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 02.04.2013 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :

கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து), பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும், ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை), நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு***.- "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. : 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. : 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706.
தொலைநகல் இல. : 081-2210595.

5-68

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 03.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2013 |
| | | வெள்ளி | 10.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2013 |
| | | வெள்ளி | 17.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2013 |
| | | வியாழன் | 23.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2013 |
| | | வெள்ளி | 31.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2013 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2012 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2012 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.